# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2016

## புவியியல்

482

தரம்: 06

சுட்டெண் :..........................................

நேரம்: 2.00 மணித்தியாலம்

### பகுதி - I

❖ **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01) சூரியன் உதிக்கும் திசையாகக் கருதப்படுவது.

1) வடக்கு 2) கிழக்கு 3) தெற்கு 4) மேற்கு

02) சூரியன் வானில் மறையும் திசையாகக் கருதப்படுவது.

1) வடக்கு 2) கிழக்கு 3) தெற்கு 4) மேற்கு

03) கிழக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் அமைந்துள்ள திசை.

1) வடகிழக்கு 2) தென்கிழக்கு 3) தென்மேற்கு 4) வடமேற்கு

04) பிரதான வானிலை மூலகம்.

1) வெப்பநிலை 2) மழை 3) காற்று 4) முகில்

05) வெப்பநிலை அளப்பதற்குப் பயன்படுத்தப்படும் அலகு

1) மில்லிமீற்றர் 2) மில்லிலீற்றர் 3) சென்ரிமீற்றர் 4) செல்சியஸ்

06) யாழ் மாவட்டத்தில் வானிலை அவதானிப்பு நிலையம் அமைந்துள்ள இடம்

1) திருநெல்வேலி 2) அச்சுவேலி 3) சாவகச்சேரி 4) சுன்னாகம்

07) இலங்கையில் வளிமண்டலவியல் திணைக்களம் அமைந்துள்ள மாவட்டம்

1) அம்பாந்தோட்டை 2) யாழ்ப்பாணம்

3) கொழும்பு 4) மட்டக்களப்பு

08) வானிலைத் தரவுகளைக் கட்டாயமாக அறிந்திருக்க வேண்டிய நபர்

1) கணக்காளர் 2) பொறியியலாளர் 3) ஆசிரியர் 4) மாலுமி

09) நீராவி மேலெழுந்து குளிர்வடைவதால் உருவாகுவது

1) மழைவீழ்ச்சி 2) காற்று 3) முகில் 4) மின்னல்

10) மழை வருவதற்கு முன்பாக வானத்தில் காணப்படும் முகிலின் நிறம்

1) கறுப்பு 2) நீலம் 3) வெள்ளை 4) ஊதா

11) மழைவீழ்ச்சியை அளவிட பயன்படுத்தும் கருவி

1) வெப்பமானி 2) மழைமானி

3) காற்றுவிசைமானி 4) பாரமானனி


12) வீடுகளையும் வீதிகளையும் அமைக்கப் பொருத்தமான பிரதேசம்.

1) மலைப்பிரதேசம் 2) சமவெளி

3) கடற்கரை 4) பள்ளத்தாக்கு


kalvi.lk

❖ **கீழ்வரும் உருவினை அவதானித்து 13 - 14 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.**




13) பாடசாலையில் இருந்து நோக்கும்போது வடக்குத் திசையில் அமைந்திருப்பது.

1) சந்தை 2) தபாற்கந்தோர் 3) மருந்தகம் 4) கோவில்

14) பாடசாலைக்குத் தெற்குத் திசையில் அமைந்திருப்பது.

1) வங்கி 2) கடை 3) மருந்தகம் 4) ஹோட்டல்

15) பாடசாலைக்கு கிழக்குத் திசையில் அமைந்திருப்பது.

1) தபாற்கந்தோர் 2) சந்தை 3) மைதானம் 4) ஹோட்டல்

16) பாடசாலைக்கு மேற்குத் திசையில் அமைந்திருப்பது

1) கோவில் 2) தபாற்கந்தோர் 3) வங்கி 4) சந்தை

17) பாடசாலைக்கு வடக்கில் அமைந்திருப்பது.

1) கடை 2) வங்கி 3) மைதானம் 4) ஹோட்டல்

18) பாடசாலைக்குத் தென்கிழக்கில் அமைந்திருப்பது.

1) ஹோட்டல் 2) கடை 3) வங்கி 4) மைதானம்

19) பாடசாலைக்கு வடமேற்கில் அமைந்திருப்பது.

1) கடை 2) மைதானம் 3) சந்தை 4) வங்கி

20) பாடசாலைக்கு தென்மேற்கில் அமைந்திருப்பது.

1) வங்கி 2) மைதானம் 3) ஹோட்டல் 4) கடை

(20x2=40புள்ளிகள்)

## பகுதி - II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க**

(01) 1) முதலாம் தவணையில் புவியியல் பாடத்தில் நீர் செய்த கணிப்பீட்டு வகைகள் இரண்டினை எழுதுக.

(3புள்ளி)

2) இக் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட பாட அலகுகளைக் குறிப்பிடுக.

(4புள்ளி)

3) கணிப்பீட்டினைச் செய்வதற்கு நீர் தகவல்கள் பெற்ற வழிகள் இரண்டினைத் தருக.

(4புள்ளி)

4) கணிப்பீட்டினைச் செய்தமையால் நீர் பெற்றுக்கொண்ட நன்மைகள் இரண்டினைக்குறிப்பிடுக.

(4புள்ளி)

(15புள்ளிகள்)

kalvi.lk

(02) 1) உமது பாடசாலையின் பெயரை எழுதுக.

(3புள்ளி)

2) உமது பாடசாலையின் அதிபரின் பெயரை எழுதுக.

(4புள்ளி)

3) உமது பாடசாலை அமைந்துள்ள கிராமசேவகர் பிரிவின் பெயரும் இலக்கமும், பிரதேச செயலாளர் பிரிவையும் தருக.

(4புள்ளி)

4) உமது பாடசாலை அமைந்துள்ள மாவட்டம், மாகாணத்தைத் தருக.

(4புள்ளி)

(15 புள்ளிகள்)

(03) 1) இலங்கையிலுள்ள மாவட்டங்கள், மாகாணங்களின் எண்ணிக்கையைத் தருக.

(3புள்ளி)

2) இலங்கையில் மிகச்சிறிய மாவட்டத்தைத் தருக.

(4புள்ளி)

3) இலங்கையில் மிகப்பெரிய மாவட்டம் யாது?

(4புள்ளி)

4) வட மாகாணத்தில் அடங்கும் மாவட்டங்கள் ஐந்தினையும் எழுதுக.

(4புள்ளி)

(15 புள்ளிகள்)

04) 1) வானிலை என்பது யாது?

(3புள்ளி)

2) வானிலை மூலகங்கள் இரண்டினைத் தருக.

4புள்ளி)

3) காற்றின் திசை, காற்றின் வேகம் என்பவற்றை அளக்கப் பயன்படும் கருவிகளை எழுதுக.

(4புள்ளி)

4) மழைவீழ்ச்சியினால் எமக்குக் கிடைக்கும் பயன்கள் நான்கினை எழுதுக.

(4புள்ளி)

(15புள்ளிகள்)

Education කල්වි අධ්‍යාපන

Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
| --- | --- |
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page